ஆக்கம்: ஆசிரியை S. சானு பிரியதரஷனி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

## பகுதி 1

**சரியான விடையை தெரிவு செய்க**

1). சங்க இலக்கியங்களில் விறலியையும் கூத்தர் தலைவியையும் பற்றி விளக்கும் இலக்கியம்?
1) பட்டினப்பாலை 2)சிறுபாணாற்றுப்படை 3) மலைபடுகடாம் 4) புறத்திணை 5) கபாலம்

2). இந்திரனது மகனின் பெயரென்ன?
1) இந்திரஜித் 2) சயந்தன் 3) கர்ணன் 4) விக்ரமன் 5) மகலன்

3). இந்திர விழாவில் மாதவி ஆடிய கௌத்துவத்தின் எண்ணிக்கை?
1) 6, 2) 7, 3) 8, 4) 5, 5) 11

4). "ஆடுகின்றிலை கூத்துடையான்........" எனப் பாடியவர் யார்?
1) சுந்தரர் 2) மணிவாசகர் 3) நாவுக்கரசர் 4) சம்பந்தர் 5) ஔவையார்

5). "வீணாவித்யாதர, ஆதாத்யதும்புரு, வீணாநாதர்" என்ற விருது பெயர்களைப் பொற்ற அரசர்?
1) ராஜசிம்மன் 2) மகேந்திரன் 3) வர்மன் 4) பராக்கிரமன் 5) விக்கிரமன்

## பகுதி 2

**1)**

1. நடனத்தினைக் கற்று முறையாக அரங்கேற்ற நடனப்பெண் எவற்றினைக் கற்றிருக்க வேண்டுமென சிலப்பதிகாரம் கூறுகின்றது?

2. இசை ஆசிரியன், கவிஞன், தண்ணுமை வாசிப்போன், குழல் இசைப்போன், யாழ் ஆசிரியன் இவ்வனைவர் பற்றியும் விளக்குக

3, அரங்கின் அமைப்பை விளக்குக

4. சங்கமருவிய காலத்தில் இடம்பெற்ற ஆடல் வகைகள் பற்றி விளக்குக

**2)**

1. பல்லவர்காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவன் இசைவடிவானவன், நடன வடிவானவன் என எவ்வாறு முன்வைத்தனர் என்பதை உதாரண வரிகளுடன் தருக?

2. சிவபெருமானின் திரு நடனம் பற்றி யார் யார் எவ்வாறு கூறியுள்ளனர் என்பதை விளக்குக.

3. பல்லவர்கால இசைக் கருவிகளைத் தருக?

4. பல்லவர்கால நடன மாதர்களின் வாழ்க்கை முறைபற்றி விளக்குக?

5. அரசர்களையும் அவர்களது விருதுப் பெயர்களையும் தருக?.